# "கடன் மறுசீரமைப்பின் விளைவுகளும் பொருளாதார இராஜதந்திரம் மற்றும் வெளியுறவுக் கொள்கையில் அதன் தாக்கமும்"

## லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தின் வெளியுறவுக் கொள்கை மன்றம் கலந்துரையாடல்

லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தின் 4வது வெளியுறவுக் கொள்கை மன்றம் 2024 ஜீலை மாதம் 11ஆம் திகதி வியாழன் அன்று லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய கற்கைகள் நிறுவனத்தின் லைட்ஹவுஸ் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இலங்கையின் கடன் மறுசீரமைப்பின் விளைவுகள் மற்றும் பொருளாதார இராஜதந்திரம் மற்றும் வெளியுறவுக் கொள்கையில் அதன் தாக்கம் குறித்து இங்கு விசேடமாக கலந்துரையாடப்பட்டதுடன், குறிப்பாக ஆட்சியில் வளர்ச்சி சார்ந்த சீர்திருத்தங்களை கொண்டுவருதல், நடைமுறைப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் மற்றும் பொருளாதார இராஜதந்திரத்தை மேம்படுத்தும் வெளியுறவுக் கொள்கை மற்றும் பேண்தகு பொருளாதார வளர்ச்சிக்கான வழிமுறைகள் குறித்து அனைத்து அரசியல் கட்சிகளிடையேயும் ஒருமித்த கருத்தை கட்டியெழுப்புதல் இலங்கையின் இன்றியமையாத தேவை என்பது இதன்போது வலியுறுத்தப்பட்டது.

காலாண்டு அடிப்படையில் நடைபெறும், லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய கற்கைகள் நிறுவனத்தின் தலைமையில் 'வெளியுறவுக் கொள்கை மன்றம்' சமகால வெளியுறவுக் கொள்கை விவகாரங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கும், வெளியுறவுக் கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் குறித்த இலங்கை கண்ணோட்டத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்பதற்கும் துறைசார்ந்தவர்களை ஒன்றிணைக்கிறது. லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய கற்கைகள் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர், தூதுவர் ரவிநாத ஆரியசிங்கவினால் நெறிப்படுத்தப்பட்ட இந்த மன்றத்தில், வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனத்தின் வருகைதரு சிரேஷ்ட உறுப்பினர் கலாநிதி கணேசன் விக்னராஜா, இலங்கை வர்த்தக சங்கத்தின் தலைவர் துமிந்த ஹுலங்கமுவ, பொருளியலாளரும் உலக பொருளாதார மன்றத்தின் துறைசார் அங்கத்தவருமான தலால் ராபி, மற்றும் வெரிடே ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் சுபாஷினி அபேசிங்க ஆகியோர் உள்ளிட்ட நான்கு குழு உறுப்பினர்கள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கடன் மறுசீரமைப்பு பெறுபேறுகளின் பக்கவிளைவுகளை மதிப்பிட்ட தூதுவர் ரவிநாத ஆரியசிங்க, "சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை பற்றிய பகுப்பாய்வு அறிக்கையில்" முன்மொழியப்பட்டுள்ள பொறிமுறைகள், பரிந்துரைகள் மற்றும் உள்ளக இடையூறுகளான நிலையான கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் இல்லாமை, வெளிப்படைத்தன்மை இல்லாமை மற்றும் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டு, சம வாய்ப்புகளுக்கான தேவை, பொருட்கள் தொகுதியை விரிவாக்குதல் மற்றும் ஏற்றுமதியில் பெறுமதி சேர்ப்பு அம்சங்களை அதிகரிப்பதற்கான தேவை போன்றவற்றின் காரணமாக இலங்கையின் பொருளாதார இராஜதந்திரம் அனுபவித்துவரும் நீண்டகால சவால்களை வெற்றிகொள்ள உதவும் என்றார். இந்த தடைகளை நீக்குவதன் மூலம், சந்தை வாய்ப்புகளை திறத்தல், உதவித் திட்டங்களை மீளவும் ஆரம்பித்தல், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பின் (OECD) கடன் தரப்படுத்தல் மற்றும் ஏனைய குறியீடுகளின் பாதகமான நிலைமைகளை தளர்த்துதல் அத்துடன் இலங்கை மீதான பாதகமான பயண ஆலோசனைகளை தளர்த்துதல் ஆகிய அம்சங்களில் இலங்கையின் வெளி பங்காளிகளை இலங்கைக்கான கொள்கைகளை மீளாய்வு செய்ய தூண்டலாம்.

உலக பூகோள-பொருளாதாரம் சிதறுண்டிருக்கும் ஒரு கட்டத்தில் ஒரு நிச்சயமற்ற யுகத்திலேயே இலங்கையின் பொருளாதார மீட்சி இடம்பெற்று வருவதாக வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனத்தின் வருகைதரு சிரேஷ்ட உறுப்பினர் கலாநிதி கணேசன் விக்னராஜா எச்சரித்தார். சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டங்களையும் கடந்து சிந்திப்பதும், இலங்கைக்குள்ளேயே வளர்ச்சி சார்ந்த

சீர்திருத்தங்களை மீள மாற்றியமைப்பதும்தான் ஒரு மாற்றத்தை கொண்டுவரும் வளர்ச்சிக்கான திறவுகோல் என்று அவர் வலியுறுத்தினார். நாட்டின் வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து வெற்றிகரமாக தப்பிப்பிழைத்த போதிலும், இலங்கையின் பொருளாதாரம் பலவீனமாகவே உள்ளது என்று எச்சரித்த அவர், முழுமையான மீட்சியானது இலங்கை நீண்ட கால சீர்திருத்த நிகழ்ச்சி நிரலில் ஒருமித்த கருத்தை அடைவதை வேண்டிநிற்கிறது என்றும் குறிப்பிட்டார். இலங்கையின் பொருளாதார மீட்சியில் வெளிவிவகாரக் கொள்கை முக்கியப் பங்கு வகிக்கும் என்று குறிப்பிட்ட அவர், ''எமது தேசிய நலன்கள் மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பு குறித்து மிகவும் உன்னிப்பாக இருக்க வேண்டியதன்'' அவசியத்தையும் வலியுறுத்தினார்.

நாட்டின் நிதித் தரப்படுத்தலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் இலங்கை மக்களுக்கு நன்மை பயக்கும் பொருளாதாரத்தின் மீது சாதகமான பார்வையை ஏற்படுத்தும் என இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் துமிந்த ஹுலங்கமுவ குறிப்பிட்டார் இலங்கையின் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கு மிகப்பெரிய பங்களிப்பை வழங்குவது, தடைப்பட்ட இருதரப்பு திட்டங்களுக்கு புத்துயிர் அளிப்பதாகும், இது சந்தையில் நாணய புழக்கத்தை அதிகரிக்கும் என்றும் அவர் கூறினார். கப்பல் மற்றும் ஏற்பாட்டியல் மையமாக செயற்படுவதில் இலங்கைக்குள்ள ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்வது, உட்கட்டமைப்பு சுற்றுலாத்துறையில் அதிக முதலீடு மற்றும் தகவல் தொழில்நுட்பம், வணிகமுறை வெளிப்பணி மையங்கள் (BPO) தொழிற் துறையில் அதிக கவனம் செலுத்துவது ஆகியவை பொருளாதார வளர்ச்சியை முழுமையாக மீட்டெடுப்பதற்கு பங்களிக்கும் என்றும் அவர் பரிந்துரைத்தார். இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட 'தொலைநோக்கு 2030' கொள்கை ஆவணத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள கொள்கைப் பரிந்துரைகள் குறித்து அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சிகளுடன் கலந்துரையாடல் நடைபெற்று வருவதாகவும், அது முன்னோக்கிய பாதை தொடர்பில் ஒரு பொருளாதார இணக்கப்பாட்டினை எட்டுவதற்கு உதவும் என்று நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உலகப் பொருளாதார மன்றத்தின் நிபுணத்துவ அங்கத்தவர் தலால் ராபி, கடன் மறுசீரமைப்பு என்பது 2029 ஆம் ஆண்டு வரை ஒரு பேண்தகு பொருளாதாரத்திற்கான முக்கியமான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அவகாசத்தை வழங்கும் எனத் தெரிவித்தார். திருப்பிச் செலுத்தும் கடப்பாடுகள் தொடங்குவதற்கு நான்கு வருடங்கள் உள்ள நிலையில் ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் சௌகரியமாக இருந்துவிடக் கூடாது என்று அவர் வலியுறுத்தினார். இந்தியாவும் தாய்லாந்தும் பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டதைப் போல் வெற்றிபெறுவதற்கு, இலங்கை தனது பிரச்சினைகளை மிகச்சரியாக அடையாளம் கண்டு ஏனைய நாடுகளின் ஆதரவில் தங்கியிருக்க வேண்டும் என்று அவர் விளக்கினார்.

கடன் மறுசீரமைப்பு என்பது முடிவல்ல, அது உண்மையில் ஆரம்பம் என்று வெரிட்டே ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் சுபாஷினி அபேசிங்க தெரிவித்தார். இதற்கு முன்னரும் சீர்திருத்தத்திற்கான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், சுய நலன்கள், ஊழல் மற்றும் நிர்வாகத்தில் உள்ள பலவீனங்கள் ஆகியவை முன்னேற்றத்தைத் தடுத்துவந்தன என்று அவர் குறிப்பிட்டார். கடன் மறுசீரமைப்பு காலம் இலங்கைக்கு இந்த தடைகளை நிவர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பம் என்றும், இல்லையெனில் பொருளாதார சீர்திருத்தங்கள் வெற்றியடையாது என்றும் அவர் மேலும் கூறினார். ஆட்சியமைப்பில் சீர்திருத்தங்கள் இல்லாமல் பொருளாதார சீர்திருத்தங்கள் வெற்றியடையாது என்றும், மேலும் இலங்கை எதிர்பார்க்கும் வளர்ச்சியை அடைவதற்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி மட்டும் போதாது என்றும், நிறுவன மற்றும் ஒழுங்குமுறை சீர்திருத்தங்கள் முக்கியமானவை என்றும் அவர் வலியுறுத்தினார். குறிப்பாக சர்வதேச திறமைகள் மற்றும் முதலீடுகள் தேவைப்படும் வெளிநாட்டு முதலீடுகள் மீதான அணுகுமுறைகளில் மாற்றம் வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார், இவற்றை இலங்கையால் உலகை அச்சுறுத்தலாகப் பார்க்க முடியாது என்றும் கூட்டாண்மை மூலம் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கேள்வி பதில் அமர்வில் பின்வரும் விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டிருந்தது. உத்தேச பொருளாதார மாற்ற சட்டமூலத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் மாற்றத்திற்கான வாய்ப்புகள், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் உட்பட இலாபம் ஈட்டாத தற்போதைய அரச தொழில்முயற்சிகளை (SOEs) மறுசீரமைக்க வேண்டியதன் அவசியம், தெளிவான, நீண்ட கால நேரடி வெளிநாட்டு முதலீடுகள் பற்றிய வரைபடத்தின் தேவை மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆளுகை பகுப்பாய்வு மதிப்பீட்டிற்கு இணங்க கொள்முதல் மற்றும் முதலீட்டை ஈர்ப்பதில் வெளிப்படைத்தன்மையுடன் சமவாய்ப்பினை நிறுவுதல், மற்றும் சீர்திருத்த செயல்முறையை அதன் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக அரசியலை அகற்ற செய்ய வேண்டியதன் அவசியம் ஆகிய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. மேலும், பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் வறுமை நிலை இரட்டிப்பாகியிருப்பது, சுகாதாரம் மற்றும் கல்விக்கான செலவினங்களை அதிகரிக் வேண்யதன் அவச;ம் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் விவசாயத் துறையின் வளர்ச்சியை விரைவுபடுத்தல் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. பல்வேறு காலக்கட்டங்களில் வெவ்வேறு வெளித் தரப்புகளால் பிரத்தியேகத்தன்மை கோரப்பட்டுவந்த சூழலில், இலங்கை ஒரு சமவாய்ப்பினை பேணுவதன் முக்கியத்துவம் மற்றும் பொருளாதார இராஜதந்திரம் மற்றும் வெளியுறவுக் கொள்கைகளில் அதன் ஈடுபாடுகளில் நேர்மையாகவும் பக்கசார்பின்றியும் இருப்பதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. கலந்துரையாடலில் பங்குபற்றிய தென் கொரியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கனடா உள்ளிட்ட வெளிநாட்டுத் தூதரகங்களின் பிரதிநிதிகள், இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக உறுதியளித்த அதேவேளை, மறுசீரமைப்பு மற்றும் முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள் குறித்த தங்களது கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர்.